[1984 மார்ச் 8

இணைப்பு II

(351 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

விவர அறிக்கை.

கரூரிலிருந்து தூத்துக்குடிக்கு திண்டுக்கல்-மதுரை-மணியாச்சி வழியாக ஒரு அகல இருப்புப்பாதை அமைக்க வேண்டுமென்று 1978 ஆம் ஆண்டிலிருந்து முதலமைச்சர் அவர்களும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், பிரதமருக்கும் இரயில்வே அமைச்சருக்கும், நிதி அமைச்சருக்கும் பல்வேறு கட்டங்களில் நேர்முகக் கடிதங்கள் எழுதி வற்புறுத்தி வந்ததன் காரணமாக, 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மத்திய அரசிடமிருந்து வந்த கடிதத்தில் கரூரிலிருந்து திண்டுக்கல் வரை அகல இருப்புப்பாதை அமைப்பதற்கும், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வரை இணையாக இன்னொரு அகல இருப்புப்பாதை அமைப்பதற்கும், மதுரையிலிருந்து மணியாச்சி வரையில் உள்ள இருப்புப் பாதையை அகல இருப்புப்பாதையாக மாற்றுவதற்கும் மற்றும் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி வரை மணியாச்சி வழியாக, இணையாக, இன்னொரு அகல இருப்புப்பாதையை அமைப்பதற்கும் ஆணை வெளியிட்டாகி விட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

2. நான்கு சிமெண்ட் ஆலைகளும் ஒரு ரசாயன உர ஆலையும் ஒரு பெரிய துறைமுகமும் உள்ள தென் மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலிக்குப் போதுமான அகல இருப்புப்பாதை இரயில் போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் அவைகள் பின்தங்கிய நிலைமையில் உள்ளன. இவைகளின் முன்னேற்றம் கருதி, மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட மேற்குறித்த வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்த ஆணை வழங்கும்படி மத்திய இரயில் அமைச்சருக்கு முதலமைச்சர் 8—2—1982-ல் கடிதம் எழுதினார். அதற்கு மத்திய இரயில்வே அமைச்சரிடமிருந்து 8—3—1982 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதில் வந்துள்ளது :—

கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்குப் புதிய அகல இருப்புப்பாதை அமைப்பதற்கு ஆய்வு முன்னேற்றத்தில் உள்ளது. கரூரிலிருந்து-திருநெல்வேலி வரையில் எல்லா வேலைகளையும் ஒரே சமயத்தில் எடுத்துக் கொள்வதற்கு போதிய நிதிவசதி இல்லை என்றும், இருந்தபோதிலும், இவ்வேலையின் முக்கியத்துவம் கருதி திருநெல்வேலியிலிருந்து மணியாச்சி வழியாக தூத்துக்குடிக்கு இணையாக ஒரு அகல இருப்புப்பாதை போடும் வேலை இப்பொழுது

எடுத்துக் கொள்ளப்படும். இதன் மூலம் தூத்துக்குடியிலிருந்து கொச்சி—சென்னை (திருநெல்வேலி, திருவனந்தபுரம் வழியாக) மற்றும் இதர இடங்களுக்கு நேரடி அகல இருப்புப்பாதை தொடர்பு கிடைக்கும். இத்திட்டத்தினுடைய மற்றப் பகுதிகள் அதிக நிதி வசதி எப்பொழுது கிடைக்குமோ அப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

3. கரூர்-தூத்துக்குடி-திருநெல்வேலி திட்டத்தை முழுமையாக விரைவில் ஒரே சமயத்தில் எடுத்து நிறைவேற்றக் கோரி மத்திய இரயில்வே அமைச்சகத்திற்கு 30—9—1982 அன்று மீண்டும் கடிதம் எழுதப்பட்டது. அதற்கு மத்திய அரசு தனது 13—11—1982-ந் தேதியிட்ட கடிதத்தில் இத்திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 70 லட்சத்துக்கும் மேல் ஒரு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், கடுமையான நிதிப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டத்திற்கு மேலும் அதிக நிதி ஒதுக்க இயலாது என்றும் இருக்கக்கூடிய குறைந்த நிதி வசதியைக் கொண்டு மணியாச்சி வழியாக தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி வரை இணையாக ஒரு அகல இருப்புப்பாதை முதற்கட்டமாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தது.

4. பின்தங்கிய மாவட்டங்கள் விரைவில் முன்னேற்றம் அடைய இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற 1984-85-ஆம் ஆண்டிலாவது தேவையான நிதியை ஒதுக்குமாறு மத்திய இரயில்வே அமைச்சகம் 23—7—1983 அன்று மீண்டும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்கடிதத்திற்கு மத்திய அரசு தனது 10—8—1983-ந் தேதியிட்ட கடிதத்தில் ஏற்கெனவே கூறியவாறு, நிதி நிலை காரணமாக இத்திட்டத்தை ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்ள இயலாது என்றும் வெவ்வேறு கட்டங்களில் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

5. இந்த திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, இதனை முழுமையாக ஒரே சமயத்தில் எடுத்து விரைவில் முடிக்க கோரியும் தேவையான நிதியினை ஒதுக்கிட வேண்டியும் முதலமைச்சரிடமிருந்து மத்திய இரயில்வே அமைச்சருக்கும் மற்றும் மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவருக்கும் மீண்டும் நேர்முக கடிதங்கள் 7—1—1984 அன்று அனுப்பப்பட்டன. இதற்கு மத்திய திட்டக் குழுவின் துணை தலைவரிடமிருந்து முதல்மைச்சருக்கு வரப்பெற்ற

13—2—1984-ந் தேதியிட்ட கடிதத்தில் கரூர்-திண்டுக்கல், மதுரை-தூத்துக்குடி திருநெல்வேலி திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதில் முதலமைச்சர் கொண்டுள்ள அக்கறையைப் பாராட்டுவதாகவும், ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்வது கடினமாகிக் கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். இருப்பினும் கரூர்-தூத்துக்குடி இரயில் பாதையின் தேவையை நிதி ஒதுக்கீடுகள் செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய விவரங்களிலிருந்து கரூர்-தூத்துக்குடி அகல இரயில் பாதைத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற தக்க நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS